# பாஸ்கா காலம்

# 3 ஆம் ஞாயிறு

திருவழிப்பாட்டு ஆண்டு C (14-04-2013)

## திருப்பலி முன்னுரை:

இறை இயேசுவில் அன்பு நிறை அருட்தந்தை! (அருட்தந்தையர்களே) அன்புநிறை சகோதர்களே! சகோதரிகளே இறைபிரசன்னத்தில் மீண்டும் ஒரு புதிய வாரத்தைதுவங்க கூடியிருக்கும் உங்கள் அனைவரையும் உயிர்த்த இயேசுவின் திருநாமத்தில் அன்போடு அழைக்கின்றேன். உயிர்பின் காலத்தில் இந்த மூன்றாம் வாரத்தில் இறைப்பணியாற்ற அன்போடு தூண்டப் பெறுகிறோம். அதன் ஒருசில கூறுகளை இன்றைய திருப்பலி வாசகங்கள் நம்முன் வைக்கின்றன.

## உணவருந்த வாருங்கள் !

உயிர்த்த இயேசு தம் சீடரிடம் காட்டும் பாசமும், பரிவும் நம் உள்ளத்தைத் தொடுகின்றன. அவர்கள் தம்மைக் கைவிட்டு ஓடிவிட்டதையோ, தமது உயிர்ப்பை நம்ப மறுத்ததையோ, தங்களின் பழைய வாழ்க்கைக்கே மீண்டும் திரும்ப முடிவு செய்ததையோ அவர் பொருட்படுத்தவில்லை. மாறாக, தந்தை தம் பிள்ளைகள்மேல் பரிவு காட்டுவதுபோல இயேசு தம் சீடர்களுக்குப் பரிவு காட்டுகிறார்.

அவர்களுக்கு மீன்பாடு கிடைக்கவில்லை என்பதை அவர்களிடம் விசாரித்து அறியும்போதும், படகின் வலைப்பக்கத்தில் வலை வீசச்சொல்லி, பெரும் மீன்பாடு கிடைக்கச் செய்யும்போதும், களைப்போடும், பசியோடும் அவர்கள் கரைக்கு வரும்போது, அவர்களுக்கு உணவு தயாரித்து வைத்திருந்து, உணவருந்த வாருங்கள்□ என்று அழைக்கும்போதும், உயிர்த்த இயேசுவின் பரிவை நாம் கண்கூடாகக் காண முடிகிறது.

இந்தப் பாஸ்காக் காலத்தில் உயிர்த்த இயேசுவின் பாசத்தை நாமும் அனுபவிப்போம். நமது கடந்த கால வாழ்வை, குறைகளை, பாவங்களை அவர் நினைவுகூராமல், நம்மைப் பரிவுடன் பராமரிக்கும் அவரது பேரன்பைப் போற்றி மகிழ்வோம். பெருமகிழ்ச்சியுடன் இத் திருப்பலியில் பங்கு பெறுவோம்.

## முதல் வாசகம்:

அவர்கள் நாள்தோறும் கோவிலிலும் வீடுகளிலும் தொடர்ந்து கற்பித்து, இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியை அறிவித்துவந்தார்கள்.

திருத்தூதர்பணி நூலிலிருந்து வாசகம் 5:27-32, 40-41

27 அழைத்து வந்தவர்களை அவர்கள் யூதத் தலைமைச் சங்கத்தின்முன் நிறுத்தினார்கள்.
தலைமைக் குரு அவர்களை நோக்கி, 28 ”நீங்கள் இந்த இயேசு பற்றிக் கற்பிக்கக்
கூடாது என்று நாங்கள் கண்டிப்பாய்க் கட்டளையிடவில்லையா? என்றாலும் எருசலேம்
முழுவதும் நீங்கள் கற்பித்து வருகிறீர்கள். மேலும் இந்த மனிதருடைய இரத்தப்
பழியையும் எங்கள்மீது சுமத்தப் பார்க்கிறீர்களே!” என்றார். 29 அதற்குப் பேதுருவும்
திருத்தூதரும் மறுமொழியாக, ”மனிதர்களுக்குக் கீழ்ப்படிவதைவிட கடவுளுக்கு அல்லவா
கீழ்ப்படிய வேண்டும்? 30 நீங்கள் சிலுவையில் தொங்கவைத்துக் கொன்ற இயேசுவை
நம் மூதாதையரின் கடவுள் உயிர்த்தெழச் செய்தார். 31 இஸ்ரயேல் மக்களுக்கு மனம்
மாற்றத்தையும் பாவமன்னிப்பையும் அளிப்பதற்காகக் கடவுள் அவரைத் தலைவராகவும்
மீட்பராகவும் தமது வலப்பக்கத்துக்கு உயர்த்தினார். 32 இவற்றுக்கு நாங்களும் கடவுள்
தமக்குக் கீழ்ப்படிவோருக்கு அருளும் தூய ஆவியும் சாட்சிகள்” என்றனர். 41 இயேசுவின்
பெயரை முன்னிட்டு அவமதிப்புக்கு உரியவர்களாகக் கருதப்பட்டதால் திருத்தூதர்கள்
மகிழ்ச்சியோடு தலைமைச் சங்கத்தை விட்டு வெளியே சென்றார்கள். 42 அவர்கள்
நாள்தோறும் கோவிலிலும் வீடுகளிலும் தொடர்ந்து கற்பித்து, இயேசு கிறிஸ்துவைப்
பற்றிய நற்செய்தியை அறிவித்துவந்தார்கள்.

- இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.

- இறைவா உமக்கு நன்றி

## பதிலுரைப் பாடல்:

**பல்லவி:** ஆண்டவரே, உம்மை ஏத்திப் புகழ்வேன் ஏனெனில், நீர் என்னைக் கைதூக்கி விட்டீர்

திருப்பாடல்கள் 118:1-2, 16-17, 22-23

1 ஆண்டவரே, உம்மை ஏத்திப் புகழ்வேன் ஏனெனில், நீர் என்னைக் கைதூக்கி விட்டீர் என்னைக் கண்டு என் பகைவர் மகிழ நீர் விடவில்லை.4 இறையன்பரே, ஆண்டவரைப் புகழ்ந்து பாடுங்கள் தூயவராம் அவரை நினைந்து நன்றி கூறுங்கள். **பல்லவி:**

4 இறையன்பரே, ஆண்டவரைப் புகழ்ந்து பாடுங்கள் தூயவராம் அவரை நினைந்து நன்றி கூறுங்கள். 5 அவரது சினம் ஒரு நொடிப் பொழுதுதான் இருக்கும் அவரது கருணையோ வாழ்நாள் முழுதும் நீடிக்கும் மாலையில் அழுகை காலையிலோ ஆர்ப்பரிப்பு.
6 நான் வளமுடன் வாழந்தபோது, "என்னை ஒருபோதும் அசைக்க முடியாது" என்றேன்.
**பல்லவி:**

10 ஆண்டவரே. எனக்குச் செவிசாயும் என்மீது இரங்கும் ஆண்டவரே, எனக்குத் துணையாய் இரும். 11 நீர் என் புலம்பலைக் களிநடனமாக மாற்றிவிட்டீர் என் சாக்குத் துணியைக் களைந்துவிட்டு எனை மகிழ்ச்சியால் உடுத்தினீர். 12 ஆகவே என் உள்ளம் உம்மைப் புகழ்ந்து பாடும் மௌனமாய் இராது என் கடவுளாகிய ஆண்டவரே, உமக்கு என்றென்றும் நன்றி செலுத்துவேன். **பல்லவி:**

## இரண்டாம் வாசகம்

அரியணையில் வீற்றிருப்பவருக்கும் ஆட்டுக்குட்டிக்கும் புகழ்ச்சியும் மாண்பும் பெருமையும் ஆற்றலும் என்றென்றும் உரியன

திருவெளிப்பாடு நூலிலிருந்து வாசகம் 5:11-14

11 தொடர்ந்து நான் பார்த்துக் கொண்டிருக்கும்போது, அரியணையையும் உயிர்களையும் மூப்பர்களையும் சுற்றி நின்ற கோடிக்கணக்கான வானதூதர்களின் குரலைக் கேட்டேன்
12 "கொல்லப்பட்ட ஆட்டுக்குட்டி வல்லமையும் செல்வமும் ஞானமும் ஆற்றலும் மாண்பும் பெருமையும் புகழ்ச்சியும் பெறத் தகுதி பெற்றது" என்று அவர்கள் உரத்த குரலில் பாடிக் கொண்டிருந்தார்கள். 13 பின்பு, விண்ணுலகு, மண்ணுலகு, கீழுலகு, கடல் எங்கும் இருந்த படைப்புகள் அனைத்தும், அவற்றில் இருந்த ஒவ்வொன்றும், "அரியணையில் வீற்றிருப்பவருக்கும் ஆட்டுக்குட்டிக்கும் புகழ்ச்சியும் மாண்பும் பெருமையும் ஆற்றலும் என்றென்றும் உரியன" என்று பாடக் கேட்டேன். 14 அதற்கு அந்த நான்கு உயிர்களும், "ஆமென்" என்றன. மூப்பர்கள் விழுந்து வணங்கினார்கள்.

- இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு
- இறைவா உமக்கு நன்றி

## நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி

அல்லேலூயா, அல்லேலூயா!இயேசு இறந்து உயிருடன் எழுப்பப்பட்ட பின்பு தம் சீடருக்கு இப்போது மூன்றாம் முறையாகத் தோன்றினார். அல்லேலூயா

## நற்செய்தி வாசகம்

யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 2:1-19

1 பின்னர் இயேசு தம் சீடருக்குத் திபேரியக் கடல் அருகே மீண்டும் தோன்றினார்.
அவர் தோன்றியது இவ்வாறு 2 சீமோன் பேதுரு, திதிம் எனப்படும் தோமா,
கலிலேயாவிலுள்ள கானாவைச் சேர்ந்த நத்தனியேல், செபதேயுவின் மக்கள் ஆகியோரோடு
இயேசுவின் சீடர்களுள் வேறு இருவரும் கூடியிருந்தனர், 3 அப்போது சீமோன் பேதுரு
அவர்களிடம், "நான் மீன்பிடிக்கப் போகிறேன்" என்றார். அவர்கள், "நாங்களும் உம்மோடு
வருகிறோம்" என்று போய்ப் படகில் ஏறினார்கள். அன்று இரவு அவர்களுக்கு மீன்
ஒன்றும் கிடைக்கவில்லை. 4 ஏற்கெனவே விடியற்காலை ஆகியிருந்தது. இயேசு கரையில்
நின்றார். ஆனால் அவர் இயேசு என்று சீடர்கள் அறிந்து கொள்ளவில்லை. 5 இயேசு
அவர்களிடம், "பிள்ளைகளே! மீன் ஒன்றும் கிடைக்கவில்லையா?" என்று கேட்டார்.
அதற்கு அவர்கள், "இல்லை" என்றார்கள். 6 அவர், "படகின் வலப்பக்கத்தில் வலை
வீசுங்கள் மீன் கிடைக்கும்" என்று அவர்களிடம் கூறினார். அவர்களும் அவ்வாறே
வீசினார்கள். மீன்கள் மிகுதியாய் அகப்பபட்டதால் அவர்களால் வலையை இழுக்க
முடியவில்லை. 7 இயேசுவின் அன்புச் சீடர் அதைக் கண்டு பேதுருவிடம், "அங்கு
நிற்பவர் ஆண்டவர்தாம்" என்றார். அதைக் கேட்டவுடன் தம் ஆடையைக் களைந்திருந்த
சீமோன் பேதுரு ஆடையை இடுப்பில் கட்டிக்கொண்டு கடலில் குதித்தார். 8 மற்றச்
சீடர்கள் மீன்களுடன் வலையை இழுத்துக்கொண்டு படகிலேயே வந்தார்கள். அவர்கள்
கரையிலிருந்து வெகு தொலையில் இல்லை ஏறக்குறைய நூறு மீட்டர் தொலையில்தான்
இருந்தார்கள். 9 படகைவிட்டு இறங்கியவுடன் கரியினால் தீ மூட்டியிருப்பதையும் அதன்மீது
மீன் வைத்திருப்பதையும் அவர்கள் கண்டார்கள். அங்கு அப்பமும் இருந்தது. 10
இயேசு அவர்களிடம், "நீங்கள் இப்போது பிடித்தவற்றில் சில மீன்களைக் கொண்டு
வாருங்கள்" என்றார். 11 சீமோன் பேதுரு படகில் ஏறி, வலையைக் கரைக்கு இழுத்தார்.
வலை நிறைய பெரிய மீன்கள் இருந்தன. அவற்றின் எண்ணிக்கை நூற்று ஐம்பத்து
மூன்று. இத்தனை மீன்கள் இருந்தும் வலை கிழியவில்லை. 12 இயேசு அவர்களிடம்,
"உணவருந்த வாருங்கள்" என்றார். சீடர்களுள் எவரும், "நீர் யார்?" என்று இயேசுவிடம்
கேட்கத் துணியவில்லை. ஏனெனில், அவர் ஆண்டவர் தாம் என்று அவர்கள் அறிந்து
கொண்டார்கள். 13 இயேசு அவர்கள் அருகில் வந்து, அப்பத்தை எடுத்து அவர்களிடம்
கொடுத்தார் மீனையும் அவ்வாறே கொடுத்தார். 14 இவ்வாறு, இயேசு இறந்து உயிருடன்
எழுப்பப்பட்ட பின்பு தம் சீடருக்கு இப்போது மூன்றாம் முறையாகத் தோன்றினார். 15

அவர்கள் உணவருந்தியபின் இயேசு சீமோன் பேதுருவிடம், ”யோவானின் மகன் சீமோனே, நீ இவர்களைவிட மிகுதியாக என்மீது அன்பு செலுத்துகிறாயா?” என்று கேட்டார். அவர் இயேசுவிடம், ”ஆம் ஆண்டவரே, எனக்கு உம்மிடம் அன்பு உண்டு என உமக்குத் தெரியுமே!” என்றார். இயேசு அவரிடம், ”என் ஆட்டுக்குட்டிகளைப் பேணி வளர்” என்றார்.
16 இரண்டாம் முறையாக இயேசு அவரிடம், ”யோவானின் மகன் சீமோனே, நீ என்மீது அன்பு செலுத்துகிறாயா?” என்று கேட்டார். அவர் இயேசுவிடம், ”ஆம் ஆண்டவரே, எனக்கு உம்மிடம் அன்பு உண்டு என உமக்குத் தெரியுமே!” என்றார். இயேசு அவரிடம்,
”என் ஆடுகளை மேய்” என்றார். 17 மூன்றாம் முறையாக இயேசு அவரிடம், ”யோவானின் மகன் சீமோனே, உனக்கு என்னிடம் அன்பு உண்டா?” என்று கேட்டார். ”உனக்கு என்னிடம் அன்பு உண்டா?” என்று இயேசு மூன்றாம் முறை கேட்டதால் பேதுரு துயருற்று, அவரிடம், ”ஆண்டவரே உமக்கு எல்லாம் தெரியுமே! எனக்கு உம்மீது அன்பு உண்டு என்பது நீர் அறியாத ஒன்றா?”” என்றார். இயேசு அவரிடம், ””என் ஆடுகளைப் பேணிவளர்.
18 ”நீ இளைஞனாக இருந்தபோது நீயே இடையைக் கட்டிக்கொண்டு உனக்கு விருப்பமான இடத்தில் நடமாடிவந்தாய். உனக்கு முதிர்ந்த வயது ஆகும்போது நீ கைகளை விரித்துக் கொடுப்பாய். வேறொருவர் உன்னைக் கட்டி, உனக்கு விருப்பம் இல்லாத இடத்திற்குக் கூட்டிச்செல்வார் என உறுதியாக உனக்குச் சொல்கிறேன் ”
19 பேதுரு எவ்வாறு இறந்து கடவுளை மாட்சிப்படுத்தப் போகிறார் என்பதைக் குறிப்பிட்டே அவர் இவ்வாறு சொன்னார். இதைச் சொன்ன பின் பேதுருவிடம், ”என்னைப் பின் தொடர்” என்றார்.

- இது கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.

- கிறிஸ்துவே உமக்கு புகழ்.

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

நம்பிக்கை அளிப்பவராம் இறைவா,

உம் திருமகன் இயேசுவின் உயிர்ப்பை காணாமலே நம்பி ஏற்றுக்கொண்டிருக்கும் எங்கள் திருத்தந்தை, முதலாம் பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், பொதுநிலையினர் அனைவரும் தங்கள் நம்பிக்கையில் நிலைத்திருந்து, உமது சாட்சிகளாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

கடந்த காலக் கசப்பு அனுபவங்களை வென்ற வெற்றி வீரரான ஆண்டவரே,

உம்மைப் போற்றுகிறேன். எனது முன்னாள் வாழ்வு, தவறுகள் அனைத்தையும் நீர் மறந்து, மன்னித்து, என்னைப் புதுப் படைப்பாக மாற்றுவதற்கும், உமது பாசம் நிறை கண்களால் என்னைப் புதுப் படைப்பாகக் காண்பதற்கும் உமக்கு நன்றி கூறுகிறேன். என் இதயத்தைப் புதிதாக மாற்றியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

மேன்மைமிகு அரசராம் இறைவா,

உலகெங்கும் வாழும் பிற சமயத்தினர் முன்னிலையில் உண்மையின் சாட்சிகளாக வாழ்ந்து, உமது அரசைக் கட்டியெழுப்ப கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் உதவ வேண்டு மென்று உம்மை மன்றாடுகிறோம்.

உதவிசெய்ய அழைப்பவராம் இறைவா,

ஏழ்மை, தனிமை, வன்முறை, நோய் போன்ற பல்வேறு பிரச்சனைகளால் அன்பை இழந்து வாடும் மக்களிடையே, உமது அன்பின் கருவிகளாக செயலாற்றும் வரத்தினை கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் அளிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

அன்புத் தந்தையே இறைவா,

உமது வார்த்தையை தாம் விரும்பியவாறு விளக்கியுரைத்துக்கொண்டு விசுவாசிகளிடையே பிளவை ஏற்படுத்துவோர் அதிகமாகிவிட்ட இன்றைய நாட்களிலே நீரே உண்மையை வெளிப்படுத்தி உண்மை விசுவாசத்தை நோக்கி மக்களை வழிநடாத்தவும், பிளவுபட்டுக்கிடக்கும் அத்தனை விசுவாசிகளையும் ஒன்று சேர்த்து உமது தலைமைத்துவத்தின் கீழ் அவர்களை வைத்துக் காத்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

கருணையும் இரக்கமும் நிறைந்த தந்தையே!

நோயினால் வாடுவோர், தனிமையில் இருப்போர், கவலையினாலும் துன்பங்களினாலும் கலங்குவோர், தேவையில் உழல்வோர், அடிமைத்தனத்துள் வாழ்வோர் அனைவரையும் உமது கருணையினாலும், இரக்கத்தினாலும் நிறைத்து அவர்கள் அனைவருக்கும் ஆறுதலையும், நிம்மதியையும் அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## இன்றைய சிந்தனை:

“இயேசு அவர்களிடம், “பிள்ளைகளே! மீன் ஒன்றும் படவில்லையா?“ என்று கேட்டார். அதற்கு அவர்கள், “இல்லை“ என்றார்கள். அவர், “படகின் வலப்பக்கத்தில் வீசுங்கள் மீன் கிடைக்கும்“ என்று அவர்களிடம் கூறினார்“ (யோவான் 21:5-6)

தங்கள் குருவும் ஆசிரியருமாக இருந்த இயேசுவை யூத சமயத்தலைவர்களும் உரோமை அதிகாரிகளும் சேர்ந்து சிலுவையில் அறைந்து கொன்றுபோட்டதை அறிந்த இயேசுவின் சீடர்களை மிகுந்த அச்சம் மேற்கொண்டது. அவர்கள் எதிர்பார்த்த வல்லமை மிக்க மெசியாவாக இயேசு தம்மைக் காட்டிக்கொள்ளவில்லை என்பது அவர்களுக்கு ஒரு பெரிய வருத்தமாக இருந்திருக்கவேண்டும். அவர்கள் நம்பிக்கை இழந்தவர்களாக, எருசலேம் நகரை விட்டுத் தங்கள் சொந்த இடமாகிய கலிலேயாவுக்குத் திரும்பிச் சென்றார்கள். தங்கள் முன்னாளைய தொழிலாகிய மீன்பிடித்தலைத் தொடர்ந்தார்கள். இவ்வாறு தங்கள் தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது இயேசு அவர்களுக்குத் தோன்றுகிறார். இங்கேயும் சீடர்கள் இயேசுவை உடனடியாக அடையாளம் கண்டுகொள்ளவில்லை. ஏதோ ஒருவர் தங்களுக்கு மீன்பாடு எவ்வாறு இருந்தது எனக் கேட்டதாக அவர்கள் நினைத்தார்கள். இரவும் பகலும் வேலை செய்தும் அவர்களுக்கு ஒரு மீனும் அகப்படாத நிலையில், கரையில் நின்றுகொண்டிருந்த அன்னிய மனிதர் அவர்களுக்கு ஒரு உத்தி சொல்லிக்கொடுக்கிறார்: “படகின் வலப்பக்கத்தில் வலைவீசுங்கள் மீன் கிடைக்கும்“ என அவர் கூறியதை அவர்கள் கருத்தில் ஏற்று அவ்வாறே செய்கிறார்கள். யாரும் எதிர்பாராத விதத்தில் அவர்களுக்கு அதிசயமான விதத்தில் பெரும் மீன்பாடு கிடைக்கிறது. யோவான் நற்செய்தியில் “அடையாளங்கள்“ பற்றிய குறிப்பு அடிக்கடி வருகிறது. அதுபோல இதையும் ஓர் அடையாளமாகக் காண்கிறார் “இயேசுவின் அன்புச் சீடர்“ (காண்க: 2:11 6:14 9:16 11:47 21:7). அதாவது, இயேசு யார் என்பதை வெளிப்படுத்துகின்ற ஒரு தனிப்பட்ட பொருள்நிறைந்த அடையாளம் இங்கே குறிக்கப்படுகிறது.

இயேசுவை நாம் காண வேண்டும் என்றால் நமக்கு நம்பிக்கை தேவை. சாதாரண மனிதராக இயேசுவை நாம் பார்த்தால் அவருடைய போதனைகளும் சாதனைகளும் நம்மைக் கவர்ந்தாலும்கூட அவர் கடவுளின் மகனாக நம்மிடையே வந்து நமக்காகத் துன்புற்று இறந்து நமக்கு இறைவாழ்வில் பங்களித்துள்ளார் என்னும் உண்மையைக் கண்டுகொள்ள நாம் தவறிவிடுவோம். நாளெல்லாம் உழைத்து, இன்னல்களுக்கு நடுவிலேயும் வெற்றி காண இயலாமல் நாம் தவிக்கின்ற தருணங்கள் உண்டு. எவ்வளவுதான் முயன்றாலும் நம்மால் சாதிக்க இயலாத காரியங்களும் உண்டு. அவ்வேளைகளில் நாம் இயேசுவின் குரலுக்குச் செவிமடுக்க வேண்டும். கரையில் நின்றுகொண்டு அவர் நம்மை நோக்கி, “படகின் வலப்பக்கத்தில் வலையை வீசுங்கள்“ என நமக்குக் கூறுகின்ற வேளைகளில் நாம் அவருடைய குரலைக் கேட்டு அதன்படி செயல்பட்டால் வெற்றி நமதாகும். ஏனென்றால் நன்மை செய்ய நாம் விழையும்போது கடவுளின் அருள்துணையோடு நாம் எதையும் சாதிக்கலாம்.

## மன்றாட்டு:

இறைவா, உம் திருமகனின் குரலுக்கு எப்போதும் செவிமடுக்க எங்களுக்கு அருள்தாரும்.